ஜெயிலர்	1	
அசிஸ்டன்ட் ஜெயிலர்	1	
சீப் வார்டர்கள்	3	பேர்கள்
கிரேடு-1 வார்டர்	1	
கிரேடு-2 வார்டர்	6	
	12	பேர்கள்

தப்பியவர்கள் ஐந்து பேர்கள் ஆட்டோ சங்கர், செல்வம், மோகன், குமார், ராஜா என்கிற ஹரிகிருஷ்ணன். இவர்களில் முதல் மூவரும் ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். மற்ற இருவரும் வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். இன்று செய்தி தெரிந்ததும் காவல்துறை, தப்பியவர்களைப் பிடிக்க ஒரு சிறப்பு அணி அமைத்து, அவர்களைத் தேடும் பணியில் ஈடுபடுத்தி உள்ளது. இது தவிர, அவர்களை உடனே பிடிக்க எல்லாக் காவல் நிலையத்திற்கும் செய்தி தரப்பட்டு உள்ளது. சென்னை நகரப் போலீஸ் மிகவும் உஷார் நிலையில் வைக்கப் பட்டு உள்ளது என்பதை அவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிரா கரிக்கும் தீர்மானத்தை அளித்த பேராசிரியர் க. பொன்னுசாமி மற்றும் திரு. பி. மாரப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

---

* 20–8–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பங்கேற்பவர் ஒரே ஒருவர், மிகமிகச் சுருக்கமாக திரு. உ. ரா. வரதராசன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் முழு மனதோடு நன்றி உணர்வோடு வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலே உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகளை நகரியமாக மாற்றுவது என்பதற்கான விதி இருந்து பல்வேறு நகரியங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. நகரியம் என்பது நகராட்சிக்கு மேற்பட்ட ஒரு அமைப்பு போல ஒரு தோற்றம் அதிலே இருந்து வந்தது. ஆனால் உண்மையிலே ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற அமைப்புதான் உயர்வான அமைப்பு என்கிற காரணத்தாலே, நகரியமாக அறிவிக்கப்பட்டவை, எந்தக் கால கட்டத்திலே அறிவிக்கப்பட்டாலும், அவை தேர்ந்தெடுக்கப்படுகிற நகராட்சித் தலைவர், நகர மன்றத் தலைவர் உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சி மன்றக் குழுவாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து அம்பத்தூரை முதன்மையாக வைத்து, எனக்கு முன்னாலே இந்த மன்றத்திலே இதை வில்லிவாக்கம் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய மறைந்த தோழர் திரு. வி. பி. சிந்தன் அவர்களாலே இது வலியுறுத்தப்பட்டது. அந்தக் கால கட்டத்திலே அந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கேட்பாரிடத்திலே கேட்டால்தான் கோருகின்ற கோரிக்கை நியாயமாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு இடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்று இந்தக் குறுகிய காலக் கட்டத்திலே இதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறபோது, அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் நகரத்திற்கு சிறப்பான விதி முறைகளோடுகூட, அவசரச் சட்டமாக இது பிறப்பிக்கப்பட்டு, வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களோடு கூடவே அம்பத்தூர் நகராட்சியாக மாற்றப்பட்டு, அதற்கும் சேர்த்து தேர்தல் நடைபெறுவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

14–25 மணி

அம்பத்தூர் நகராட்சி மட்டுமல்ல. இந்தச் சட்டத் திருத்தம் காரணமாக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வேறு பல நகரியங்களை நகராட்சிகளாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையும் இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்தால் இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டுவருவதன் மூலம், நகரியங்களாக ஆட்சி மன்றக் குழு தேர்ந்தெடுக்கப்படாமலே உள்ள, இந்த

அமைப்புகளையும் கூட, நகராட்சிகளாக மாற்றுவதற்கு இது வகை செய்கிறது என்கின்ற காரணத்தினாலே இது ஒரு துவக்கம், இன்னும் பல்வேறு நகரியங்களை நகராட்சிகளாக ஆக்குவதற்கு இது வழி வகுக்கும். மேட்டூர், பவானிசாகர், அதேபோன்று நெய்வேலி, மதுக்கரை இன்னும் செங்கை—அண்ணா மாவட்டத்திலே இருக்கக் கூடிய 7 நகரியங்கள், தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல்வேறு நகரியங்களும் நகராட்சிகளாக மாற்றப் படுவதற்கு ஒரு வழி திறந்து வைக்கும். தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை நிர்வாகத்தினுடைய வரலாற்றிலேயே இது வரை, ஒரு வழிப் பாதையாகவே இருந்து வந்தது. நகராட்சி நகரியமாக மாறும், அல்லது பேரூராட்சி நகரிய மாக மாறும். நியமன உறுப்பினர்களைக் கொண்ட நகரியம் என்பது நகராட்சியாக மாறுவது என்பது, இதுதான் உள்ளாட்சித் துறை வரலாற்றிலேயே முதன் முதலாக நடக்கக் கூடியது என்பதனாலே இது தொடர்ந்து மேலும் பல நகரியங்களை நகராட்சிகளாக மாற்றுவதற்கு வழி வகுக்க வேண்டுமென் கின்ற முறையிலே இதை வழி மொழிந்து, இந்த சட்ட திருத் தத்திற்கு, சட்ட முன்வடிவிற்கு என்னுடைய ஆதரவை—இந்தப் பசி நேரத்திலேயும் பொறுமையாக இருந்து கேட்கின்ற உங்கள் மத்தியிலே—தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளை ஏற்று செயற்படுத்தியிருக்கக் கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களுக்கும், முன்னால் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து இதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கும் தற்போது அத் துறையை நிர்வகித்து வரும் அமைச்சர், மாண்புமிகு திரு. கோ. சி. மணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அம்பத்தூர் தொகுதி மக்கள் சார்பிலேயும் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன் வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22–8–1990) 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 13–12–1989 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியல் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

45. கும்பகோணம், தூய இருதய தொழுநோய் மையத் தினருக்குச் சொந்தமான டி. ஏ. ஓ. 9195 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 23–4–1990 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

46. சென்னை, புற்றுநோய் நிலையத்தினருக்குச் சொந்த மான டி. எஸ். ஏ. 8700 எண் கொண்ட வாகனத்திற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 701 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].